| | | |
|---|---|---|
| சாட்சி : PW 1<br>சந்திரகுமார் | அ.வ.எண். 192/2017 | 14.02.2024 |

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

திருச்சி மாவட்ட வருவாய் அலுவலகத்தில் விசாரணை நடைபெற்ற போது வா.சா.ஆ.5 ஆவணத்தை நான் தாக்கல் செய்ய சொன்னார்களா என்றால் சொன்னார்கள். மேற்படி வா.சா.ஆ.5ன் அசல் ஆவணம் காணாமல் போனதாக நான் தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். 1 முதல் 5 பிரதிவாதிகளின் சொந்த ஊர் எது என்றால் அதுப்பற்றி எனக்கு நியாபகம் இல்லை. எனது தகப்பனார் கடைசியாக எங்கு இருந்தார் என்றால் மதுரையில் இருந்தார். 1 முதல் 5 பிரதிவாதிகள் எனது தகப்பனார் வீட்டிற்கு வந்தார்களா என்றால் எனக்கு தெரியாது, சுபத்திராபாய்க்கு தான் தெரியும். 1 முதல் 5 பிரதிவாதிகள் வீட்டிற்கு எனது தகப்பனார் சென்றிருக்கிறாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1 முதல் 5 பிரதிவாதிகள் எனது தகப்பனாருடன் வேலை செய்ததாக நான் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

வா.சா.ஆ.5 ஆவணத்தின் அசல் 1ம் பிரதிவாதியிடம் உள்ளதாக மாவட்ட வருவாய் அலுவலரின் விசாரணையில் தெரிவித்தாரா என்றால் தெரிவித்தார். வா.சா.ஆ.5 ஆவணம் 1ம் பிரதிவாதி வசம் இருப்பதை பொறுத்து நான் என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் இந்த வழக்கில் தான் நடவடிக்கை எடுத்தேன். நான் தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து மோட்டார் பம்ப் செட்டில் கண்டவர்கள் தண்ணீர் எடுத்து சொல்வதாக சொல்லியிருந்தேன் அந்த கண்டவர்கள் 1 முதல் 5 பிரதிவாதிகள் உட்பட்டவர்களா என்றால் 1 முதல் 5 பிரதிவாதிகள் யார் என்று எனக்கு தெரியாது, தாவா கிராமத்தில் அருகில் உள்ளவர்கள் தண்ணீர் எடுப்பார்கள்.

தாவா சொத்துக்கள் முழுவதும் பிளாட்டாக மாற்றியது யார் என்றால் ரெக்காட்டு படி 6ம் பிரதிவாதியான செந்தில்குமார் என்பவர் பிளாட்டாக மாற்றியுள்ளார். தாவா சொத்தின் சுவாதீனம் எனக்கு வேண்டுமா என்றால் எனக்கு வேண்டும். இல்லாவிட்டால் எக்ஸ்சர்வீஸ்மேனுக்கு போகட்டும். 2000 ஆண்டுவரை எனது தகப்பனார் தாவா சொத்தை நேரடியாக சாகுபடி செய்து வந்தது எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் எனது சகோதரி சுபத்திராபாய்க்கு தான் தெரியும், அவர் உடன் இருந்து பார்த்துக்கொண்டார். தாவா சொத்து சம்மந்தமான விபரங்கள் சுபத்திராபாய்க்கு தான் முழுவதுமாக தெரியும் என்றால் சரிதான். 2000ற்கு பிறகு நானோ எனது சகோதரி சுபத்திராபாயோ சாகுபடி செய்தோமா என்றால் நான் சாகுபடி செய்யவில்லை சுபத்திராபாய் தான் சாகுபடி செய்துவந்தார். வா.சா.ஆ.1 கிரைய பத்திரம் ஆள்மாறாட்டம் செய்து ஏற்படுத்தப்பட்டது என்பது தான் எனது கட்சி என்றால் சரிதான். ஆள்மாறாட்டம் செய்து மேற்படி வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்பட்டது என்பது எப்போது என்று எனக்கு தெரியவந்தது 2016ம் ஆண்டு தெரியவந்தது. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரை உள்ள ஆவணங்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். அந்த பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் பற்றி நான் தெரியாது என்று சொல்லமுடியாது என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.1 ஆவணம் எனது தகப்பனார் சுயமாக ஏற்படுத்திய கிரைய ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலமாக தாவா சொத்தின் சுவாதீனமும் உரிமையும் பிரதிவாதிகள் வசம் தான் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி சொத்தின் ஒரு பகுதியை தான் 6ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றாலும் அந்த சொத்தின் சுவாதீனமும் உரிமையும் 6ம் பிரதிவாதி வசம் தான் உள்ளது என்றால் சரியல்ல. எனது

வழக்கு பொய்யான வழக்கு என்றாலும், வழக்கு தள்ளுபடி செய்யவேண்டுமென்றாலும் சரியல்ல.